முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

மாசு 06 ஒலி 70 பிரசோற்பத்தி தை 22 (05 02 1992) புதன்

குண்டுவெடிப்பு சந்தேக நபரால் இந்தியா, ஸ்ரீலங்கா ஏமாந்தன

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கொலை பயங் குண்டு வெடிப்பு, கூட்டுப்படைத்தலைமையக குண்டு வெடிப்பு, ராஜீவ் கொலைப்பயங்கர குண்டு வெடிப்பு ஆகியவற்றுடன் தொடர்புள்ளவர் என சந்தேகிக்கப்பட்ட ரவி என்பவரை தாம் கைது செய்ததாக அறிவித்த இந்தியாவுக்கு ஸ்ரீலங்கா புலனாய்வுக் குழுவினால் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டதாம். இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுவிட்டார் என — 04 ஆம் பக்கம் பார்க்க

நவீனரக கடற்படைப் படகு கடற்புலிகளினால் மூழ்கடிப்பு!

யாழ். குடாக் கடலில் சம்பவம் 4 கடற் படையினர் பலி!

ஸ்ரீலங்கா கடற்படையினரால் அண்மையில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஆழம் குறைந்த கடற்பரப்பில் செல்லக்கூடிய நீர் உந்து விசை (Water Jet Propelled) கடற்படைப்படகு கடற்புலிகளினால் யாழ் குடாக் கடலில் வைத்து மூழ்கடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 41 அடி நீளமான இந்த புதிய கடற்படைப்படகு பூநகரியிலிருந்து ஆனையிறவு இராணுவ முகாமுக்கு குடாக்கடல் ஊடாகச்சென்றுகொண்டிருந்தது இப்படகு மீது திடீரென கடற்புலிகள் நடாத்திய தாக்குதலில் படகு மூழ்கியது இச் சம்பவத்தில் 4 கடற்படையினர் பலியானதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

40 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடிய இந்தப் படகு ஆனையிறவு முகாமிற்கு பூநகரியிலிருந்து பொருள்களை எடுத்துச் சென்ற போதே கடற்புலிகளால் தாக்கப்பட்டு — 04 ஆம் பக்கம் பார்க்க

கொழும்புப் பத்திரிகை எச்சரிக்கை

அப்பிலாந்துறையில் 4 இளைஞர் கொலை

மட்டக்களப்பு அம்பிலாந்துறையில் 4 இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கடந்த ஞாயிறன்று இக் கிராமத்தை சுற்றிவளைத்த படையினரும் தமிழ் குழு .. 04 ஆம் பக்கம் பார்க்க

மேற்குலக நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு

உதவி வழங்க வேண்டாமென லலித்தும் காமினியும் கோரிக்கை

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கொழும்பிலுள்ள தூதரகங்களுக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களான லலித் அத்துலத் முதலியும் காமினி திசநாயக்கவும் கடந்த வாரம் விஜயம் செய்தனர். ஸ்ரீலங்கா அரசுக்கு இந்நாடு ...04 ஆம் பக்கம் பார்க்க

வடக்கு இராணுவ நடவடிக்கை ஆபத்தான விளைவை தோற்றும்

வடபகுதியில் அரச படைகள் எடுக்கும் இராணுவ நடவடிக்கைகளினால் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒழித்துவிடலாம் என எண்ணுவது மிகப்பெரும் தவறாகும்; இராணுவ நடவடிக்கையில் நாட்டில் புதிய பிரச்சினைகளும் பின் விளைவுகளும் ஏற்படலாம் எனக் கொழும்புத் தினசரியொன்று எச்சரித்துள்ளது.

வடக்கில் ஏற்படும் போரினால் தெற்கின் பொருளா ...04 ஆம் பக்கம் பார்க்க

அனுராவின் இந்திய விஜயம் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது

அனுரா பண்டாரநாயக்கா சில தினங்களுக்கு முன்னர் திருவனந்தபுரம் பெங்களூர் சென்றது தொடர்பாக பல சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன ...04 ஆம் பக்கம் பார்க்க

காவற்துறைப் பணிமனை திறந்து வைக்கப்பட்டது

பருத்தித்துறைப் பிரதேச தமிழீழ காவற்துறைப் பணிமனை நேற்றுக் காலை 7 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மகளிர் படைத் தளபதி செல்வி ஜெயந்தியும், வடமராட்சி விசேட தளபதி அர்ச்சுனாவும்மங்கள விளக்கேற்றி —04 ஆம் பக்கம் பார்க்க

புதிய சமுதாயத்தை உருவாக்குவது தமிழீழ காவற் துறையின் பணி

- பொறுப்பாளர் நடேசன் முரசொலிக்குப் பேட்டி

சர்வதேசத்திற்கும் ஒரு முன்மாதிரியான காவற்துறையே தற்போது தமிழீழத்தில் தோற்றுவிக்கப்படுகிறது

இவ்வாறு தெரிவிக்கின்றார் தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் பருத்தித்துறை பிரதேச தமிழீழ காவற்துறைப் பணிமனைத் திறப்பு விழாவிற்கு வருகை தந்திருந்த திரு நடேசன் முரசொலி செய்தியாளருக்கு விசேட பேட்டி அளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

எமது தமிழீழச் சமூகம் சிங்கள வல்லாதிக்க ஆட்சியின் போது அடிமைகளாக நடாத்தப்பட்டதுடன் அவர்களது பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றியவர்களினால் பணம் பறித்தல், சுரண்டல், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவற்றில் பல இன்னல்களை அனுபவித்தார்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யச் செல் ...04 ஆம் பக்கம் பார்க்க

பாரிஸ் மாநாட்டிற்கு ஸ்ரீலங்கா குழு இன்று பறப்படும்

நாளை மறுதினம் பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் டி பி. விஜேதுங்க தலைமையிலான ஸ்ரீலங்காக் குழு இன்று புறப்படுகிறது

இக்குழுவில் நிதியமைச்சின் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கம் திறைசேரியின் பிரதிச் செயலாளர் கே சண்முகலிங்கம், ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரடமன் வீரக்கோன், —04 ஆம் பக்கம் பார்க்க

விமானப்படையினருக்கே யுத்தத்தில் அதிக பாதிப்பாம்

வடக்கு கிழக்கில் நடைபெறும் போரினால் ஸ்ரீலங்கா விமானப்படையினரே தற்போது அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் விமானப்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன

வடக்கு கிழக்கில் பிரதான போர் ஏதாவது ஏற்பட்டால் தரை படையினர் விமானப் படையினரையே நம்பியுள்ளனர் ஆட்கள் முதல் இராணுவ தளபாடங்கள் வரை விமானப்படையினரே யுத்த முனைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

இதனால் கடந்த ஆண்டில் பல விமானப்படை விமானிகள் தமது விடுமுறை ஒய்வுகளையே இழந்ததாகவும் அவ்வட்டாரங்கள் கவலை தெரிவித்ததனவாம். — 04 ஆம் பக்கம் பார்க்க

கிழக்கில் படிப்படியாக படைகள் மீது புலிகள் அழுத்தம்

கிழக்கு மாகாணத்தில், புலிகள் மெதுவாக ஆனால் உறுதியாக அரசபடையினர் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என ஷாமின்ரா பேர்டினான்டோ என்ற கட்டுரை — 04 ஆம் பக்கம் பார்க்க

நாட்டின் ஒற்றையாட்சி முறை பாதுகாக்கப்படும் - ஜனாதிபதி

"சகலதரப்பினரதும் ஒருமித்த கருத்தொற்றுமை அடிப்படையிலேயே நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும். இதன்மூலம் நாட்டின் ஒன்றையாட்சி முறையை பாதுகாப்போம்"

இவ்வாறு நேற்று ஸ்ரீல[illegible]வின் 44 ஆவது ஆண்டு சுதந்திர தின வைபவத்தை முன்னிட்டு சுதந்திர சதுக்கத்தில் உரை —04 ஆம் பக்கம் பார்க்க

வல்வைக் கடலில் இழுவை படகுகள்

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் சுமார் ஐம்பது இழுவைப்ப[illegible]டமாடிய தாக [illegible] இருந்து பார்த்[illegible]த்தனர் [illegible] பார்க்க

செய்தி உலகம்

அமெரிக்கா

10 மீட்டர் விட்டமும் 11 அடுக்குகளும் கொண்ட உலகிலேயே மிகப்பெரிய டெலஸ்கோப் ஒன்றை ஹாவாய் தீவில் அமைக்க அமெரிக்கா தொடங்கியுள்ளது இப்பணியில் ஜப்பான் நாட்டு விஞ்ஞானிகளுடன் பல்வேறு ஐரோப்பிய நாட்டு விஞ்ஞானிகளும் ஈடுபடுவார்கள் என்றும், இந்த இராட்சத டெலஸ்கோப்பிற்கான கண்ணாடிகளை மேற்கு ஜெர்மனி, பிரத்தியேக மாகத்தயாரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. ஆனால் 2000 ஆம் ஆண்டின் துவக்கத்தில்தான் இந்த டெலஸ்கோப் உபயோகத்திற்கு வருமாம்.

இந்தியா

ஆறு முதல் எட்டு சதவிகித வட்டிக்கு இந்தியாவிற்கு எல்லா நாடுகளும் பண உதவி செய்த பொழுது ரஷ்யா மட்டுமே இரண்டரை சதவிகிதம் வட்டியில், 10-15 ஆண்டு நீண்ட காலத் தவணையில் பணம் கொடுத்துக் கொண்டு வந்தது. இதனால் இந்தியா, ரஷ்யாவே உண்மையான நண்பன் என்று கூறி வந்தது. அண்மையில் ரஷ்யாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் இனியும் அதை நம்பியிருப்பது விவேகம் இல்லையென்று கண்ட இந்தியா இப்பொழுது அமெரிக்காவின் புகழ்பாட ஆரம்பித்துள்ளது.

பிரிட்டன்

ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு 29, 97, 92 459, மீட்டர்கள் என்று பிரிடிஷ் விஞ்ஞானிகள் புதிதாக சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள் இது என்ன பழைய செய்தி என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை இது முன்பு பிரிடிஷ் விஞ்ஞானிகளாலேயே கண்டு பிடிக்கப்பட்ட ஒளியின் வேகத்தை விட 99 மீற்றர், அதாவது கிட்டத்தட்ட ஒரு மீற்றர் அதிகம் என்று தெரிவிக்கிறார்கள்.

பெர்லின்

காற்றின் வேகத்தால், தானே இயங்கும் ஒரு ஜெனரேட்டரை பெர்லின் விமான நிலையத்தில் தற்பொழுது பொருந்தியுள்ளார்கள். இந்த ஜெனரேட்டர் விமானநிலையத்திற்கு பயன்படுவதுடன் அருகிலேயே உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்கும் பயன்படுகிறது.

"ஆல்பர்ட் கோயிட்கே" என்ற விஞ்ஞானி கண்டுபிடித்துள்ள மிகவும் பயனுள்ள அதேசமயம் அதிகம் செலவு ஆகாத இந்த தானியங்கி ஜெனரேட்டர் விரைவில் உலகெங்கிலும் பாவனைக்கு வந்துவிடும் என்று கூறப்படுகிறது

திபெத்

இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் சைவ மதத்தவர் இறந்தவர்களின் சாம்பலை எடுத்து, நதியிலோ அல்லது கடலிலோ கலப்பதை இறந்தவர்களுக்குச் செய்யும் ஈமச்சடங்காகக் கருதுவதுபோல், திபெத்தியர்கள் இறந்த பெற்றோரின் தொடை எலும்பை எடுத்து அதில் நாதஸ்வரம் போன்ற இசைக் கருவியை உருவாக்கி, பிள்ளைகள் அதை வாசிப்பதை தமது பெற்றோருக்கு செய்யும் நன்றிக்கடனாகக் கருதுகின்றனர். (16)

★ அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது
மனித உரிமை மீறல் குற்றங்கள் வளைகுடா நாடுகளில் அதிகரிப்பு

குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்து இருந்த போது அந்த நாட்டு மக்களை சட்டவிரோதமாகக் கடத்துவதிலும், சித்திரவதை செய்வதிலும், கொலை செய்வதிலும், கற்பழிப்பதிலும் ஈராக் இராணுவம் மிலேச்சத்தனமாக நடந்துள்ளதாக மனித உரிமைகள் பற்றிய அறிக்கை ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் கடந்த ஆண்டின் மனித உரிமை மீறல்கள் பற்றித்தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈராக்கில் பொது மக்கள் ஆட்சியாளருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து ஆர்ப்பாட்டம் செய்த போது சனநெருக்கடி மிக்க நகரங்களில் குண்டு வீசித் தாக்கி தனது சொந்த நாட்டு மக்களையே ஈராக் கொன்று குவித்ததாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஈராக்கின் தென் பகுதியில் ஷீர்டிஷ் இன மக்களை பெண்கள் குழந்தைகள் என்றும் பாராமல் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளனர் என்றும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குவைத்திலிருந்து ஈராக் வெளியேறிய பின்னர் ஈராக் இராணுவத்தினருடன் ஒத்துழைத்தனர் என்று குற்றஞ்சாட்டி பலஸ்தீனியர்கள் பலர் வைத் இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிரியாவில் கைதிகளின் கண்களைத்தோண்டியும் நகங்களைப் பிடுங்கியும் சித்திரவதை செய்ததாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் கைதிகள் அடித்துத் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், பல கைதிகள் தமது வழக்கறிஞரையோ உறவினரையோ சந்திக்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர் என்றும் அவ் அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது,

பிரிட்டிஷ் முறைவேண்டும் விரும்புகிறார் சேடப்பட்டி

'பேரவைத் தலைவரை ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கும் பிரிட்டிஷ் [illegible]யைப் பின்பற்றவேண்[illegible]

இவ்வா[illegible] சட்ட சபை [illegible] சேடப்பட்டி முத்தையா கூறியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

சென்னை தி. மு. க. ஊர்வலத்தில் போலிஸ் தடியடி, துவக்குச் சூடு!

அரசியல் உள்நோக்கம் என ஆலடி அருணா குற்றச்சாட்டு

சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று முன்தினம் மாலை 'தடா' சட்ட துஷ்பிரயோகத்தைக் கண்டித்து நடத்திய ஊர்வலத்தினர் மீது பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் தடியடிப் பிரயோகம் செய்ததுடன் றபர்க் குண்டுகளையும் பாவித்தனர்.

இச்சம்பவத்திற்கு அரசியல் உள்நோக்கம் இருப்பதாகத் தி. மு. க. பேச்சாளர் ஆலடி அருணா குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வூர்வலத்தின் ஒரு பகுதியில் ஏற்பட்ட வன்முறையில் 14 பொலிசார் உட்பட 27 பேர் காயமடைந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'தடா'ச் சட்டப் பிரயோக நடைமுறையை ஆட்சேபித்து ஆளுநரிடம் மனு கையளிக்கும் பொருட்டு இவ்வூர்வலம் நடத்தப்பட்டது.

சாலையோரக் கடைகள் தாக்கப்பட்டதாகவும், பக்கங்களுக்குக் கல்லெறியப்பட்டதுடன் தீ வைக்கப்பட்டதாகவும், எச்சரிக்கை பயனளிக்காது போகவே கண்ணீர்ப் புகைப் பிரயோகத்துடன், தடியடி நடாத்தப்பட்டதாகவும், அவையும் பயனளிக்காததால் றபர் குண்டுகளால் தாங்கள் சுட்டதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

வன்முறை தொடர்பாக 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் இவ்வூர்வலத்துக்குப் பொலிசார் பாதுகாப்பு அளிக்கவில்லை என்றும், ஊர்வலத்தினர் மீது பொலிசார் காரணமின்றிப் புகைக் குண்டுகளை வீசித் தடியடிப் பிரயோகம் நடத்தியதாகவும் தி. மு. க. செய்தித் தொடர்பாளர் ஆலடி அருணா குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊர்வலத்துக்குள் புகுந்த சமூக விரோதச் சக்திகளைத் தடுக்காமல் வேண்டுமென்றே பொலிசார் தி.மு.க. தொண்டர்களைத் தாக்கியதாகவும் இதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கரும்பைப் பிழியலாம் அரும்பை . . . ?

குழந்தைகளை வேலை வாங்கும் அவலம் குறித்து தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ள சிந்தனை மொழிகள் சில:

- ✶ மழலை இச் சமுதாயத்தின் கண். சாண் வயிற்றுக்காக சுமக்க விடாதே மண்.
- ★ கரும்பைப் பிழியலாம்... அரும்பைப் பிழியலாமா?
- ✶ கன்றுகளைப் பூட்டியா வண்டியை ஓட்டுவது?
- ★ இளமையில் கல் என்றார் ... கல் உடைக்கவா சொன்னார்?

பொறுத்திருங்கள் என்றார் . .

'பொருளாதார முறை பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் என்று எல்லாவற்றையும் பற்றி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இலங்கைப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கவே இல்லையே?' என்று சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற மார்க்ஸிஸ்ட் கட்சிகளின் 14-வது அகில இந்திய மாநாட்டின் போது செயலாளர் சுர்ஜித்திடம் நிருபர்கள் கேட்டனர்.

மாநாடு முடிய இன்னும் ஒரு நாள் இருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள் என்று சொன்னார் சுர்ஜித்

ஆனால் கடைசிவரை இலங்கைப் பிரச்சினை இம் மாநாட்டில் விவாதிக்கப்படவில்லை.

இவ்வாறு இத் தகவலை தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது

இந்தியா ஸ்ரீலங்காவுடன் தொடர்பு கொள்ளுமாம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சென்னை நீதிமன்ற சிறப்பு நீதிமன்ற நீதிபதி சித்திக் கடந்த வெள்ளிக்கிழமை பிறப்பித்த உத்தரவு தொடர்பாக ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சு உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதான தகவலை நேற்று கொழும்பு நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

இவ்வுத்தரவை யடுத்து புதுடில்லி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பாக இந்தியா ஸ்ரீலங்காவுடன் தொடர்பு கொள்ளும் என்றும் அவ்வதிகாரி கூறினார் என்றும் இச் செய்தி மேலும் தெரிவிக்கிறது

ஆஸி-இந்திய கிரிக்கெட் கபிலதேவ் உலக சாதனை

அவுஸ்திரேலியாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 5-வது 5 நாள் சர்வதேச ரெஸ்ற் கிரிக்கெட் பந்தயத்தில் இந்திய அணி வேகப் பந்து வீச்சாளர் கபில்தேவ் 'ரெயிலரின் விக்கற்றுகளைக் கைப்பற்றியதுடன், 400 விக்கற்றுகளை முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் வீழ்த்திய வீரர் என்ற உலக சாதனையைப் புரிந்துள்ளார். மேலும் 1991-ம் ஆண்டு ஷார்ஜாவில் இடம் பெற்ற ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டித் தொடரிலும் 200 விக்கற்றுகளைச் சரித்த முதல் பந்து வீச்சாளர் என்ற சாதனையையும் கபில்தேவே வைத்திருக்கிறார்.

இவர் புரிந்திருக்கும் இந்த உலக சாதனையை தற்பொழுது 300 க்கு மேல் விக்கற்றுகளை வீழ்த்திய நியூசிலந்ரிச்சட்வி காட்டிலி, அவுஸ்திரேலிய வீரர் டென்னிஸ் வில்லி, இங்கிலாந்து வீரர்கள் லான்ஸ் கிப்ஸ், டெரக் அண்டவூட், அயன் பொத்தம். மேற்கிந்திய லான்ஸ் கிப்ஸ், பாகிஸ்தான் இம்ரான்கான் ஆகிய உலகப் பிரசித்தி பெற்ற வீரர்களால் முறியடிக்க முடியாது ஏன் என்றால் இம்ரான்கானைத் தவிர மற்றவர்கள் எல்லாம் ஓய்வு பெற்று விட்டார்கள், இம்ரானும் கூடிய சீக்கிரம் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார். (16)

கண்ணதாசன் மைந்தனிடம் எதிர்பார்த்த வார்த்தை

ஐயாயிரம் பாடல்கள் வரை எழுதி ஈடிலாப் பெருமை பெற்ற கவிஞர் கண்ணதாசனைப் பற்றி அவரது உதவியாளர் இராம கண்ணப்பன் சமீபத்தில் தஞ்சை தமிழ்த்தாய் இலக்கிய பேரவை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் 'கண்ணதாசனோடு என் அனுபவங்கள்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில் பல சுவாரசிய சம்பவங்களை வெளியிட்டார்

கண்ணதாசன் வெற்றுப் பத்தாவுக்கு அடிமையானவர் கிடையாது, 'கவிஞர்' என்று அவரை யாரும் அழைத்தால் அதை விரும்புவதும் இல்லை. குறிப்பாக உற்றார், உறவினர் வட்டாரத்தில் 'கவிஞர்' என்று குறிப்பிட்டுப் பேசும்போது கோபப்படும் இயல்புடையவர். ஒரு தடவை அவரது மகன் தனது தந்தையாரை 'கவிஞர்' என்று செல்லமாகக் கூப்பிட்டு அழைக்கையில் உணர்ச்சிவசப்பட்டு அடித்து விட்டார். நான் கவரிடம் 'அண்ணா இதற்குப் போய் ஏன் கோபப்படுகிறீர்கள்?' என்றேன் 'நான் ஊருக்கு மாத்திரம்தான் கவிஞர்' என் மகனுக்கு நான் தந்தையல்லவா! அந்த வார்த்தைக்குத்தானே நான் மயங்குவேன் என்றார்.

திரு. கண்ணப்பன் மேற்கண்ட தன் அனுபவத்தையும் இவ்வுரையின் போது குறிப்பிட்டார்.

சிறுவிளம்பரம்

தேவை

துப்பரவான வெள்ளை முழுப்போத்தல் தேவை. மிலக்வைற், யாழ்ப்பாணம். 02008

★ கொழும்பு நாளிதழ் நேற்று அறிவிப்பு

'பேச்சுவார்த்தை சாத்தியமில்லை பாரிய தாக்குதல் ஆயத்தம்'

''யாழ் குடாநாட்டில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் பாரிய தாக்குதல் ஒன்றினை நடத்துவதற்கான சாத்தியக கூறுகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசியல் அவதானிகள் நேற்று முன்தினம் கூறியதாகக் கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் இவ்வார இறுதியில் பாரிஸில் நடைபெறும் ஸ்ரீ லங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னதாக இத்தாக்குதல் நிகழ்வதற்கில்லை என்றும் அவர்கள் கூறியதாகவும் இச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

''பேச்சுவார்த்தை சாத்தியமில்லை, தாக்குதல் முனைப்பே அதிகரிக்கிறது'' என்ற தலைப்புடன் இச்செய்தி நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

விடியும்வரை காத்திருந்தது பொலிஸ்

கைதான சுப்புலஷ்மி சிரித்த முகத்துடன்! படமெடுக்கவும் 'போஸ்' கொடுத்தார் பிந்தியதகவல்

'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் தி.மு.க அமைசர் திருமதி சுப்புலஷ்மி ஜெகதீசன் கைதான போது நிகழ்ந்த சில சுவையான சம்பவங்களைத் தமிழக வார இதழ் ஒன்று இப்போது வெளியிட்டுள்ளது

'எட்டாம் திகதி இரவே சென்னையிலிருந்து ஃபிரான்ஞ் பொலிஸ் ஈரோடு வந்து இறங்கி விட்டது இரவோடு இரவாக அவரைக் கைது செய்யப் பொலிசார் சற்றுத் தயக்கம் காரணம் அவர் ஒரு பெண்ணாக இருப்பதால் எனவே பொலிஸ் விடியும்வரை காத்திருந்தது அன்றிரவே அவரது தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் தகவல்

அவரைப் பொலிஸ் கைது செய்தபோது அவர் பொலிஸாரிடம் நான் இந்தத் தகவலைக் கலைஞருக்குத் தெரியப்படுத்திவிட்டு உங்களோ வருகின்றேன்' என்று சொன்னராம், ஆனால் பொலிஸார் அதற்குச் சம்மதிக்கவில்லை என்றும் தெரிகிறது

சிரித்த முகத்துடன்பொலிஸ் வேனிலிருந்து இறங்கினார் சுபுலஷ்மி பரபரப்பான சூழ்நிலைக் கிடையில் சிறப்பு நீதிபதி சிறதிக முன் ஆஜர் படுத்தப்பட்டார். பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் விசாரணை மற்றும் சிறைக் காவல் நாள் குறித்து உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றத்திலிருந்து வரும் போது படமெடுக்க முயன்ற புகைபடப்பிடியப்பாளரைப் பொலிசார் பின்புறம் தள்ள முயற்சிக்க அதைப் பார்த்த சுப்புலஷ்மி ஒரு சில விநாடிகள் நின்று சிரித்த வண்ணம் போஸ் கொடுத்தார் பொலிஸ காவலையும் மீறி சீனியர் நிருபர்கள் அவரை அணுகி சில கேள்விகள் கேட்க ஆரம்பிக்க இரண்டொருவார்த்தைகள் மாத்திரம் சொல்லி விட்டு அவர் அங்கிருந்து நகர்ந்தார்

இவ்வாறு அவ்விதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இரு பிரிவிலும் றோயலே வெற்றி

வீரவேங்கை 'மகன் றோய்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காகத் திருகுமரன் விளையாட்டுக் கழகத்தினரால் கொச்சுவிலில் நடாத்தம்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் பிரிவு இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகத்தை 10:2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது

'ஏ' பிரிவில் றோயல் 'ஏ' அணி நாவாந்துறை சென் மேரிஸ் 'ஏ' அணியை 3: 1 என்ற கோலால் வென்றது, இப்போட்டிக்கு நடுவராக எஸ். அகிதீன் கடமையாற்றினார். (16)

நியூயோர்க் மாநாட்டில் பலத்தபாதுகாப்பு ஏற்பாடு

நியூயோர்க்கில் உலகத் தலைவர்கள் கலந்துகொண்ட உச்சி மாநாடு நடைபெறுகையில் மேற்கொள்ளப்பட்ட பெரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிப் பின்வரும் தகவல் வெளியிடப்பட்டுள்ளன.

குண்டுகளை அகற்றும் ஏற்பாடுகளுடன், குறி பார்த்துச் சுடும் வீரர்கள் கூரைகள் மீது நிறுத்தப்பட்டனர்.

நகர், மாநில சமஷ்டிப் படைகள் பாதுகாப்பில் ஈடுபட்டன கம்பியூட்டர் மூலம் பெயர்கள் சோதிக்கப்பட்டதுடன், குண்டுகளைக் கண்டு பிடிக்கும் நாய்களும் அமர்த்தப்பட்டன. தானியங்கும் ஆயுதங்களையும் கண்ணீர்ப் புகை, உயிர் காக்கும் சாதனங்கள் ஆகியவற்றையும் கொண்ட வாகனங்கள் ஒவ்வொரு தலைவரின் வாகனத்துக்குப் பின்பும் சென்றன.

விமான சேவை

எயர்லங்கா நிறுவனம் சிட்னி, மெல்பன் ஆகிய நகரங்களுக்கு வாரத்தில் இரு தடவைகள் சேவைகளை நடத்தவுள்ளது.

'பாவம்! பாண்டியன்' முதல்வரின் சீனத்தால் மாற்றம்

தமிழக முதல்வருக்கு நெருக்கமாக இருந்த விசேட பிரிவு சி ஐ டி எஸ். பியான பாண்டியன் மாற்றலுக்குள்ளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் உள்துறைச்செயலர் நாகராஜனிடம் வாக்கு மூலம் பெற்ற விவகாரத்தில் பாண்டியனுக்கும் திருச்சி எஸ் பியான ஜெகந்நாதனுக்கும் பங்கு உண்டாம்.

நாகராஜன் வாக்கு மூலம் பற்றி சில இரகசியங்களைக் கலைஞர் போட்டு உடைத்ததால முதல்வருக்குச் சினம் ஏற்பட்டதாம் அந்த விவகாரங்கள் 'லீக்' ஆனது பற்றிக் கோபம் கொண்ட அவர் இந்த இரு பொலிஸ் அதிகாரிகளையும் மாற்றி விட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

'பாவம், பாண்டியன் தினசரி பிற்பகல் இரண்டு மணிக்கு போயாஸ தோட்டம் போய் முதல்வரிடம் பல விஷயங்களைச் சொல்வது வழக்கம் அவர் மாற்றப்பட்டதற்கு இன்னொரு காரணமும்சொல்லப்படுகிறது. அது-முதல்வரின் அந்நாள் நம்பிக்கையாளரும் இந்நாள் வெறுப்பாளராக ஆகிவிடவருமான நடராஜனுக்கு (முதல்வரின் உயிர் தோழி சசிகலாவின் கணவர்) பாண்டியன் ரொம்ப நெருக்கம் என்பதாம்' இப்படித் தமிழவார இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

அண்ணா நினைவு பற்றி நாவலர் 'தம்பி ஒரு நிமிஷம்'

பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினம் சென்னையிலும், தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் விரிவான வகையில் அனுசரிக்கப்பட்டதாகச் சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன

இதனையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் நிதியமைச்சர் நாவலர் இரா நெடுஞ்செழியன் அண்ணாவுடனான அந்த நாள் ஞாபகத்தைப் பற்றிப் பின்வரும் தகவலைக் குறிப்பிட்டார்

1949 இல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கிப் பதினெட்டு ஆண்டுகள் அரும்பாடுபட்டு வெற்றிக்கனியைப் பறித்து 1967 இல் ராஜாஜி மண்டபத்தில் பதவியேற்பு விழாவை முடித்துவிட்டு அப்போதுதான் முதன்முதலில் அவரவர் நாற்காலியில் அமரப் போகிறோம், 'தம்பி. ஒரு நிமிஷம்' என்றார் என்னவென்று நிமிர்ந்தால் 'இந்த நாற்காலி நிரந்தரமல்ல' என்றார் எங்களுக்கெல்லாம் ஒருமாதிரி ஆகிவிட்டது. மறுபடியும் 'இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்' என்றார்.

தடா, சட்டத்தைப் பயன்படுத்தியும், விலைவாசி உயர்வுகளை ஏற்படுத்தியும், லஞ்சம், ஊழல் நிறைந்த நிர்வாகம் என்று விமாசிக்கப்படுகின்ற நிலையிலும் உள்ள முதல்வர் ஜெயலலிதாவுக்கும் அவரது மிக நெருங்கிய சகாவான நாவலர் பேரறிஞர் அண்ணா பெயர் நினைவு கூரப்படும் இவ் வேளையில் இப் பேருண்மையைச் சற்றே காதில் சொல்லிவைத்தால் நன்றாக இருக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜனநாயக சூறாவளியில் சிக்கிய 'கொர்பி'

அசுர விழுதுகளே ஆலமரத்தை வீழ்த்திய, அதிசயக்கதையிது

பதினைந்து குடியரசுகளைக் கொண்ட சோவியத் நாட்டில் பால்டிக் குடியரசுகளான லாதிவியா, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகியவை முதலில் பிரிந்து சென்றன. இப்போது ரஷ்யா, உக்ரைன் பைலோரஷ்யா, உஸ்பெக்கிஸ்தான், கஜகிஸ்தான் அஜெர்பைஜான், மொல்தாவியா கிர்கிஸ்தான், தாஜிக்கிஸ்தான், அர்மினிய துர்க்மினிஸ்தான் ஆகிய பதினொரு குடியரசுகள் ஒன்றிணைந்து சுதந்திர நாடுகளின் பொதுச்சபையை இப்போது ஏற்படுத்தியுள்ளன. ரஷ்யா பற்றியும் ஏனைய குடியரசுகள் பற்றியும் சில முக்கிய குறிப்புகள்:

ரஷ்யா

முன்னாள் சோவியத்யூனியனில் 15 குடியரசுகள் அமைந்திருந்தன அவற்றில் ரஷ்ய கூட்டுக்குடியரசு மிகப் பெரியது. ரஷ்ய குடியரசின் தலைநகரம் முன்பு சோவியத் யூனியனுக்கே தலைநகரமாக இருந்தது மாஸ்கோ. சோவியத்ரஷ்ய என்றதும் மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கம் நினைவுக்கு வரும், ஒவ்வொருவருடமும் மிகப் பிரமாண்டமான மேதின அணிவகுப்பு இங்கே நடைபெறும், எண்ணெய். இயற்கை எரிவாயு. நிலக்கரி. வைரங்கள் உள்ளிட்ட ஏராளமான கனிவளங்கள் இங்குள்ள சைபீரியாவில் கிடைக்கின்றன மாஸ்கோ அருகில் துணா என்னும் விஞ்ஞான நகரம் உள்ளது விஞ்ஞானியும் நோபல் பரிசு பெற்றவருமான ஆந்திரி சகாரவ் ரஷ்யாவைச் சேர்ந்தவர்.

உக்ரைன்

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு அண்மையில் முக்கிய பங்காற்றியது உக்ரைன் குடியரசின் சுதந்திரப் பிரகடனம். இங்கேதான் செர்னோபில் அணுமின் நிலையம் உள்ளது, சில ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அணுமின் நிலையங்களை மூட வேண்டும் எனும் குரல் ரஷ்யாவிலும் எழுந்தது. அணு ஆயுத பலம் நிறைந்தது உக்ரைன், உக்ரைனில் சிறந்த பல எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். அவர்களுள் முக்கியமானவர் தராஷ் செவ் செங்கோ உக்ரைன்ரான் பூர்ணிகா தமிழாராய்ச்சிக்குச் சிறந்த சேவை செய்துவருகிறார்

பைலோ ரஷ்யா

முன்னாள் சோவியத் யூனியனின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது பைலோ ரஷ்யா. இந் நாட்டில் ஏரிகளும், காடுகளும், நதிகளும் ஏராளம் இங்குள்ள விஞ்ஞானிகள் பல துறைகளில் புகழ் பெற்றுள்ளனர். இங்கே ஒவ்வோர் ஆண்டும் நானூறு தலைப்புகளில் அறுபது லட்சம் பிரதிகள் கொண்ட நூல்கள் வெளியிடப்படுகின்றன இங்கே சுமார் நாற்பது மொழிகளில் வெளிவந்துள்ள படைப்புகள் பைலோ ரஷ்யா மொழியில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன.

உஸ்பெக்கிஸ்தான்

இதன் தலைநகரம் தாஷ்கென்ட் மறைந்த இந்தியப் பிரதமர் வாஜபேயி சாஸ்திரி இந்திய-பாகிஸ்தான் சமாதான ஒப்பந்தம் காண தாஷ்கென் சென்றிருந்த போதுதான் காலமானார் 1966 ஆம் ஆண்டு இங்கே நிலநடுக்கம் ஏற்பட்டுப் பெரும் உயிர்ச்சேதம் விளைந்தது. தாஷ்கென்ட் பாதாள ரயில் நிலையம் 20 முறை ஏற்பட்ட நில நடுக்கத்தைத் தாங்கியுள்ளது. பாலைவனங்களும், பாலைவனச் சோலைகளும், மலைகளும், பள்ளத்தாக்குகளும் கொண்ட பிரதேசம் இது.

கஜகிஸ்தான்

உலகில் முதன்முதலாக விண்வெளி சென்று பூமியை வலம் வந்த யூரிகாரினும் பின்னர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் விண்வெளிப் பயணம் மேற்கொண்ட இந்திய விண்வெளிவீரர் ராகேஷ் சர்மாவும் இங்குள்ள பைகானூர் தளத்தில் இருந்துதான் ராக்கெட்டில் கிளம்பினர் கஜகிஸ்தான் முன்னாள் சோவியத் குடியரசுகளில் பெரிய இடப்பரப்பைக் கொண்டதாகும் இங்கே இரும்பு, நிலக்கரி, தங்கம், வெள்ளி, தாமிரம், எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியன கிடைக்கின்றன.

அஜெர் பைஜான்

இங்கே சுமார் நாலாயிரம் வகை தாவரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்பது சத விகிதத்தை உலகில் வேறெங்கும் காணமுடியாது. இங்கு பன்னிரண்டாயிரம் விலங்கினங்கள் உள்ளன இங்கே பலர் நூற்றுக்கு மேற்பட்ட வயதுவாழ்ந்திருக்கின்றனர். ஷிராலி மிஷலிமோவ் என்பவர் 1973 ஆம் ஆண்டு தமது 167 ஆவது வயதில் இறந்தார்.

மொல்தாவியா

இங்கு பல இனத்தவர் வாழ்ந்துவருகின்றனர், இங்கு திராட்சைத் தோட்டங்கள்தான் அதிகம் இதன் வடபகுதியில் உயர்ந்த மலைகளும் தென்பகுதியில் சமதரை கொண்ட ஐரோப்பிய வெளிகளும் மத்தியில் கொத்திரி எனப்படும் வனப்பகுதியும் காணப்படுகின்றன. பண்டைக்கால மொல்தாவிய புலவாங்குழலின் ஓசை வயலின் ஓசை போன்றிருக்கும்.

கிர்கிஸ்தான்

இது குதிரைகளுக்குப் புகழ் பெற்றது. கலுக்கா நடைக் குதிரையான குல்சாரியை மையமாக்கி கிர்கிசிய எழுத்தாளர் சிங்கிஸ் ஐத்மத்தோவ் ''குல்சாரி'' என்னும் நாவலை எழுதியுள்ளார் அது உலகம் முழுவதும் பிரபலமான நாவல் மனிதன் என்பது வாழ்மொழிக் காவியம் புராதனச் சிறப்புடையது. கிர்கிசிய மக்களின் வரலாறு முழுவதையும் விவரிக்கிறது. சுமார் நாலாயிரம் வகை மூலிகைகள் இங்குகிடைக்கின்றன.

தாஜிக் கிஸ்தான்

சீனா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இதன் எல்லைகளாய் உள்ளன. உலகப் புகழ்பெற்ற மாபெரும் விஞ்ஞானியும், சிந்தனையாளருமான அவிசென்னா தாஜிக்கிஸ்தானைச் சேர்ந்தவர்' பல பிரபல கவிஞர்களையும், சிந்தனையாளர்களையும் இது உருவாக்கியுள்ள[illegible]க்கம் பார்[illegible]

★ ஆரியரட்னா உலக வங்கிக்கு கடிதம்

இலங்கைக்கான உதவிகளை நிறுத்துமாறு கோரிக்கை

இலங்கைக்கு உலக வங்கி அளிக்கும் உதவிகளை நிறுத்தி வைக்க வேண்டும் என சர்வோதயத் தலைவர் ஏ. ரி ஆரியரட்னா உலக வங்கிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் 'ஜனசக்தி' திட்டத்துக்கு உலக வங்கி அளித்துவரும் உதவி வீண் விரயமாகிறது எனவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வெகுவிரைவில் ஜப்பான் செல்லவுள்ள ஆரியரட்னா இலங்கைக்கு ஜப்பான் எதிர்காலத்தில் அளிக்கும் உதவிகளை சர்வோதய இயக்கத்தின் ஊடாக வழங்க வேண்டும் என கோரவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிங்களவர் மட்டும்

ஸ்ரீலங்கா புகையிரத திணைக்களத்தைச் சேர்ந்த நான்கு பேர் தொழில் நுட்பவியல் பயிற்சி பெறுவதற்காக பாகிஸ்தான் பயணமானார்கள்

இந்த நான்குபேரும் பெரும்பான்மையினத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்பட உள்ள உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பமுடிவுத்திகதி 20.02 1992 என அறிவிக்கப்படுகிறது

படையினர் ரோந்தின் மத்தியிலும்

காத்தான்குடியில் இரவில் கடை உடைத்து கொள்ளை

காத்தான்குடியில் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும், பொலிஸாரும் இரவில் ரோந்து புரிகின்றபோதிலும் கடை உடைத்து கொள்ளைகள் இடம்பெறுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன,

கடந்த பல மாதங்களாக இவ்வாறான கொள்ளைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 10

பாரிஸ்—

கொள்கை திட்டமிடல் இராஜாங்க அமைச்சின் செயலர் கலாநிதி கே பேர்ணாண்டோ, பிரதமரின் செயலர் கே. எம். அபேசிங்க ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

விமானப்—

தரைப்படையினர் அதிகம் நம்பியுள்ள விமானப் படையினர் புலிகளுக்கு பெரும் சவாலாக இருக்கின்றனர் எனவும், ஆனால் அண்மையில் இந்திய அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட புலிகளின் ரொங்கோவா என்ற ஆயுதக் கப்பலில் காணப்பட்ட சாம் (S. A. M) ரக ஏவுகணைகள் பற்றிய குறிப்பு புதிய அச்சங்களை படையினர் தரப்பில் ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பு

இந்திய புலனாய்வுக்குழு அறிவித்ததும் ஸ்ரீலங்கா உயர் பொலிஸ புலனாய்வுக்குழு சென்னை விரைந்தது. ஆனால் சென்னை சென்ற ஸ்ரீலங்கா புலனாய்வுக்குழு தேடப்படும் நபர் இவரிக்லை என்று கூறி திரும்பிவிட்டதாம், இதனால் இந்தியாவுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டதாம், இப்போது இக்குண்டுவெடிப்புகள் தொடர்பாக ரவி என்பவரே முக்கிய சந்தேக நபராக இருநாடுகளும் கருதுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

நவீனரக—

மூழ்கடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி குடாக் கடலில் இதே பகுதியில் தான் கடற்படைப் படகு ஒன்று கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டதும், 9கடற்படையினர் பலியானதும், பல ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

வடக்கு...

தார இலக்குகளில் குண்டுகள் வெடிக்கலாம். மலையகத்தில் புதியதோர் யுத்த முனை திறக்கப்படலாம் எனச் சுட்டிக்காட்டும் அதினசரி இது அரசபடையினருக்கு மேலதிக சுமைகளாகவே இருக்கும் எனத் தெரிவித்துள்ளது

வல்வைக்...

இவற்றுடன் ஸ்ரீலங்கா கடற்படை கப்பல்கள் நடமாடியதாகவும்தெரிவிக்கப்படுகிறது. 09

காவற்துறை—

வைக்க தமிழீழ கடற்படைத் தளபதி சூசை தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி பணிமனை நிலையத்தின் திறப்பு விழா நாடவை வெட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார்

தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் காவற் துறைக் கொடியை ஏற்றி வைத்தார்.

காவற்துறையினரின் அணிவகுப்பு மரியாதையும் இடம் பெற்றது

ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்

நாட்டின்—

யாற்றிய ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்தார்.

"வன்முறைகள் ஒழிக்கப்படவேண்டும் ஆயுதப்படையினர் கட்டுப்பாடான முறையில் நடந்து கொள்கின்றனர்" எனவும் ஜனாதிபதி அவ்வுரையில் குறிப்பிட்டார்.

"நாம் வெளிநாட்டு உதவியில் தங்கியிருக்கக் கூடாது. அப்படி தங்கியிருந்தால் அந்நாடுகளுக்கு அடிமையாக மாறவேண்டிய நிலையே ஏற்படும்" எனவும் தனது உரையில் ஜனாதிபதி எச்சரித்தார்

★ பொதுச்சொத்து இழப்பிற்கு நட்டஈடு வேண்டும்

தி. மு. க. ஊர்வலம் நடத்த ஜெயலலிதா நிபந்தனை

திராவிட முன்னேற்றக்கழகம் ஊர்வலத்தின் போது வன்முறையில் ஈடுபடாதென்றும், அப்படி ஏதாவது ஊர்வலத்தில் பொதுச் சொத்துக்குச் சேதம் ஏற்பட்டால் தகுந்த நட்டஈடு தரப்படும் என்று தி.மு.க, தலைவர் மு. கருணாநிதி எழுத்து மூலம் உத்தரவாதம் அளித்தாலே இனிமேல் தி.மு.க ஊர்வலம் நடத்த அனுமதி வழங்கப்படும் என்ற நிபந்தனையை தமிழக முதலவர் ஜெயலலிதா நேற்றுச் சட்டசபையில் அறிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழக ஆளுநரிடம் மகஜர் கையளிக்கச் சென்ற தி.மு.க. வின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது ஏற்பட்ட வன்முறை பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே முதலவர் மேற்கண்ட நிபந்தனையைத் தெரிவித்தார்

ஊர்வலத்தில் ஏற்பட்ட வன்செயல் திட்டமிட்ட செயல் என முதலவர் தெரிவித்த அதேவேளை, மேற்படி நிபந்தனை பற்றிக் கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் தரப்படவில்லை எனக்கூறி தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ கம்யூட் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் சட்டசபையிலிருந்தும் வெளிநடப்புச் செய்தனர்.

வெங்காயப் பூ வீசப்படுகிறது

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப் பூ வீதியில் வீசப்படுவதைக் காண முடிகிறது.

முன்னர் கொழும்புக்கு வெங்காயப் பூ அனுப்பி வைக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

சுன்னாகம் சந்தையில் மரக்கறி வாங்கும்போது இலவசமாக வெங்காயப் பூ வழங்கப்படுகிறது (09 22)

அனுராவின்...

இவரது இந்திய விஜயம் குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் பல்வேறு செய்திகளை வெளியிட்டுள்ளன. 10

உதவி—

கள வழங்கும் உதவிகளை நிறுத்துமாறு கோரியே லலித்தும் காமினியும் இத்தூதரங்களுக்கு சென்றதாக அரசசார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இச்செய்தியை லலித அத்துலத்முதலி மறுத்துள்ளார்,

அம்பிலாந்துறை—

வொன்றும் பலரை கைது செய்தது.

இவர்களில் நான்கு இளைஞர்கள் பின்னர் படையினரால சுட்டுக் கொலைப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கிழக்கில்...

யாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவம் தாக்குதல் நடத்த திட்டமிடுகையில் புலிகள் கிழக்கில் தமது நடவடிக்கைகளை தீவிரமாக்குகின்றனர்.

கிழக்கில் புலிகள் நகரும் தாக்குதல் அணிகள் மூலம் தமது தாக்குதலை தீவிரமாக்குகின்றனர்.

இதனால் படையினர் வடக்கில் தம்மை நிலை நிறுத்த முதல் கிழக்கிலும், வெலி ஓயாவிலும் தம்மைப் பலமாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்ப—டுள்ளது,

உண்மையான தேசிய வீரர் இந்நாட்டுத் தமிழர்களுமே

"ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்ததை முன்னிட்டு நடத்தும் விழாக்களில் தேசிய வீரர்கள் குறித்தெல்லாம் நாம் பெருமைப்படுகின்றோம் ஆனால் இப்போது இந்நாட்டின் தேசிய வீரர்கள் தமிழர்களும் தான்" என்று கொழும்புத் தினசரி ஒன்று தெரிவிக்கிறது.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் எந்நேரத்தில் எந்த வடிவத்திலும் தமது மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர் விண்ணிலிருந்து கூட அவர்களுக்கு விமானங்கள், ஹெலிகப்டர்கள் மூலம் அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன

தமிழர்களுடன் உள்நாட்டு போரினால் பலியான அனைத்து தரப்பினரையும் சுதந்திரதினத்தில் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும் எனவும் அதி தினசரி தெரிவிக்கிறது.

புதிய...

பவர்கள் பயத்தினால் பல தரகர்களை அணுகி அவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்தே தமது முறைப்பாடுகளை பதிவு செய்துவிசாரணைகளை நடாத்த வேண்டி இருந்தது ஆனால் தற்போது விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் காவற்துறையில் அவை அனைத்தும் ஒழிக்கப்பட்டு மக்களின் பூரண ஒத்துழைப்புடன் சமுதாயச் சீர்கேடுகளை அகற்றி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி வருகின்றது எமது மக்களின் பிணைப்பு அவர்களை நாம் அணுகிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பண்பு முறைகள் சர்வதேசத்திற்கும் ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது என்றும் அவர் தனது செவ்வியின் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணம், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய் போன்ற பகுதிகளில் எமது காவற் துறை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு இயங்கியவண்ணம் உள்ளன. இவ்விடங்களில் எல்லாம் மக்கள் காவற்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு தருவதுடன் குற்றத்தைத் தடுப்பதற்கு முன்னின்று ஒத்துழைப்புதந்து உதவுகின்றார்கள் அதன் மூலம் தமிழீழத்தில் இருந்து அனைத்துச் சீர்கேடுகளையும் ஒடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. போதைவஸ்து, மற்றும் போதைப் பொருள்களான கசிப்பு, டஞ்சா, தரமற்ற பதுபானம் போன்றவற்றை விற்பனை செய்பவர்கள் மீதும் அதைப் பயன்படுத்துபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுப்பதோடு அவர்களுக்கு அறிவுரை வழங்கி வருவதுடன் அதன் மூலம் அவர்களுக்கு உண்மை விளக்கமளிப்பதுடன் அவர்களிடமிருந்து நஷ்டஈடும் அறவிடப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் வெளிநாட்டுப் போதைப் பொருள்களான அபின் போன்றவற்றை எமது தமிழீழ மக்களுக்கு அனுப்பி அதன் மூலம் எமது மக்களின் மனோ நிலைகளைச் சீரழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

மக்கள் விழிப்புடன் இவைகளைக் கவனித்து எமது மக்களையும் சிறார்களையும் காப்பாற்ற காவற் துறையினருடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் இப்போர்ப்பட்ட நல்லெண்ண ஒத்துழைப்புகளை நல்கி வருவதற்கு எவ்வித தரகர்கள் வழியும் தேவையில்லை இது தமிழீழ மக்களின் காவற் துறை உங்கள் குறை நிறைகளை உங்களுடன பகிர்ந்துகொண்டு சீர் செய்வதற்காகவே உருவாக்கப்பட்டது இதற்கு சாதி மதவேறுபாடுகள் கிடையாது என்பதை வற்புறுத்தி தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகின்றேன் எனவும் நடேசன் தெரிவித்தார். 09

ஜே.வி.பியினர் கைது

பூஸா தடுப்பு முகாமிலிருந்து அண்மையில் விடுதலையான இரு ஜே வி பி. உறுப்பினர்கள் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களிடம் இருந்து வேட்டைதுப்பாக்கிகள் இரண்டும் கைக்குண்டு என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன 10

அசுர விழுதுகளே . . .

அர்மினியா

கடந்த 90 ஆம் ஆண்டு நில நடுக்கம் ஏற்பட்டுப் பல லட்சம் பேரை இழந்தநாடு இது. இங்குள்ள ஒரு பண்டைய கைச் சுவடி நிலையத்தில் ஒரு லட்சம் கையெழுத்துப் பிரதிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன இங்குள்ளவர்களின் வாழ்க்கை இசையோடு இணைந்தது.

துர்க்மினிஸ்தான்

அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த மக்களைக் கொண்ட பிரதேசம் இது ஜமுக்கான நெசவில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். குதிரைச்சவாரி இங்கே பிரபலமானது எண்பது சதவிகித நிலப்பரப்பில் பாலைவனமே பரவிக்கிடக்கிறது சில இடங்களில் மிக உயர்ந்த மணற்குன்றுகள் காணப்படுகின்றன. இங்குள்ள மக்களின் உடை முதலியவற்றில் ஒட்டோடிச் சாயல் இன்றும் காணப்படுகிறது.

பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் வனத்தினரால் [illegible]கல்விமங்காடு டச்சுவீதி'லக்ஷ்மிபில்டிங்'கில் [illegible] அச்கத்தி[illegible]1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது